**தலைப்பு 333 – கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 333 – கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கொம்ப்ட் ரோலர் நாயகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அலுவலகம் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகம் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 04 செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீட்டு நிதி எற்பாடு போதாமையால் மொத்தமாக ரூபா 1,739,000 தொகை அதாவது தொடக்க மதிப்பீட்டில் 35 சதவீதத்திலிருந்து 455 சதவீதம் வரையான வீச்சில் நிதிப்பிரமாணம் 66/69 மாற்றல்களின் மூலம் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | எரிபொருள் விலை மிகவும் அதிக அளவில் உயர்வடைதல், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான விலைகள் மிகவும் அதிக அளவில் உயர்வடைதல், எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமை என்பவற்றினால் மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள து. | நி.பி 50 இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது முடியுமான அளவு சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்திய ஆவணவாக்கலின் மூலம் அரசாங்கத்தின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல், சொத்துக்கள் தொடர்பான கிரயத்தை முகாமைத்துவம் செய்தல், கண்காணிப்புச் செய்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கிகரிக்கப்பட்ட பாதீட்டு பிரேரணைக்கு இணங்க கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது. காணி, கட்டிடம், மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், விமானங்கள், இயந்திரங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியான அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்தி ஆவணமாக்குதல் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் நிறைவேற்றப்பட வேண்டிய முன்னணி செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை தோற்றுவித்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 05 ஆண்டுகளை மிகைத்திருந்தும் மேலே காட்டிய அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கி மத்தியப்படுத்திய ஆவணவாக்கலினை மேற்கொள்வதற்கு கொம்ப்ட்ரோலர் அலுவலகத்திற்கு முடியாதிருந்தது. | 2017 மார்ச் 07 ஆந் தகிதியிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் இரண்டு ஆண்டுகள் அளவான காலம் Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் செயற்பாடுகளை முழுமையான மட்டத்தில் மேற்கொள்வதற்கு முடியாத நிலைமை காணப்பட்டது. 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றிக்கையின் மூலம் சமர்ப்பிக்குமாறு காட்டப்பட்ட தகவல்களை சமர்ப்பிப்பதற்கு எந்த அரசாங்க நிறுவனமும் தேவையான ஒதுத்துழைப்பினை வழங்கியிருக்காததுடன் மோட்டார் வாகனம், கட்டிடம், காணிகள் என்பன தொடர்பான தரவ முறைமையினைத் தயாரிப்பதற்கு கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டியிருந்ததுடன் அச்சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டள்ளன.<br><br>இதற்கு மேலதிகமாக தரவு முறைமையை தயாரிப்பது | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை தோற்றுவிக்கும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பாக மோட்டார் வாகன தரவு முறைமை 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாளதுவரையாக்கப்பட்டது. | |

### 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது முறைப்படியாக பொறுப்பேற்கப்படாது நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 03 வாகனங்கள் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் ஆளணிக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | கொம்ப்ட்ரோலர் அலுவலகத்தின் போக்குவரத்து தேவைப்பாட்டினை முகாமைத்துவம் செய்வதற்காக நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் வாகனங்கள் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டன. | முறைப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2022 திசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொம்பட்ரோலர் நாயகம் அலுவலகத்தில் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களுக்கு மத்தியில் 05 வெற்றிடங்கள் சிரேஸ்ட மட்டத்திலுள்ள வெற்றிடங்களாகும். | கெம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக சேவை தேவைபாட்டிற்கு இணங்க பதவி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஆளணியினைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |